# வட மாகாணப் பாடசாலைகளின் அதிபர் இடமாற்றம் - 2012

வட மாகாண அதிபர் இடமாற்றம் தொடர்பான நியதிகளின் வரைவு வெளியிடப்படுகின்றது. இது சம்பந்தமான திருத்த ஆலோசனைகள் இருப்பின் அவற்றினை 2012.03.31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கவாறு **செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

வட மாகாணத்தின் 05 மாவட்டங்களிலுள்ள 12 வலயங்களிலிருந்தும் (இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2 - I, 2 – II, 3) அதிபர் பிரதி நிதிகளையும் வடமாகாண அதிபர் சங்கப் பிரதிநிதிகள், இலங்கை தமிழர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள், இலங்கை ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள், இலங்கை முஸ்லிம் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கி 2012.03.02 ஆம் திகதி மாகாணக் கல்வி அமைச்சிற்கு வரவழைக்கப்பட்டு எழுத்து மூலமான ஆலோசனைகள் பெறப்பட்டன.

பெறப்பட்ட ஆலோசனைகளின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான குழு அமைக்கப்பட்டது. (குழு விபரம் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு - 01** ))

**இக் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட அதிபர் இடமாற்ற நியதிகள் பின்வருமாறு:**

## 01. பாடசாலையின் தரம்

1.1 பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்றவகையில் அதிபர் தரம் கருத்தில் எடுத்தல் வேண்டும்.

1.2 பொருத்தமான அதிபர் தரம் இல்லாத பட்சத்தில் அடுத்த தர அதிபரை அதிபர் தர சேவை மூப்பைக் கருத்தில் கொண்டு குறித்த வலயத்திலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

1.3 அவ்வாறு இல்லாத பட்சத்தில் மாவட்ட ரீதியாக பொருத்தமான தரத்தையும் அதற்கு அடுத்த தரத்தையும் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படல் வேண்டும்.

1.4 அதுவும் இல்லாத பட்சத்தில் குறித்த வலயத்தில் இறங்கு வரிசையிலுள்ள அடுத்த தரத்தினரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படல் வேண்டும்.

## 02. அதிபர் சேவையின் இடமாற்ற காலம்

2.1 ஒரே பாடசாலையில் தொடர்ந்து 07 வருடங்கள் சேவையாற்றிய அதிபர்கள் இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

2.2 பொருத்தமான பாடசாலை இல்லாதவிடத்து மாவட்ட மட்டத்தில் பொருத்தமான பாடசாலைக்கு இடமாற்றம் வழங்க முடியும்.

**03. இடமாற்ற வயதெல்லை.**

55 வயதிற்கு மேற்பட்ட அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. இவ் அதிபர்கள் வேறுபாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்குமிடத்து, இடமாற்றம் வழங்கப்படும்.

**04. ஆண், பெண், கலவன் பாடசாலைகள்.**

ஆண் பாடசாலைக்கு ஆண் அதிபரையும் பெண் பாடசாலைக்கு பெண் அதிபரையும் நியமித்தல் வேண்டும்.

கலவன் பாடசாலைகளிற்கு ஆண் அல்லது பெண் ஒருவரை அதிபராக நியமிக்க முடியும். ஆண் அதிபர் நியமிக்குமிடத்து பிரதி/உதவி அதிபர் பெண்ணாகவும் பெண் அதிபர் நியமிக்குமிடத்து பிரதி/உதவி அதிபர் ஆணாகவும் நியமித்தல் பொருத்தமானது.

**05. சமய விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் பாடசாலைகள்.**

பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் போது சமய விழுமியங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**06. கடமை நிறைவேற்று அதிபர்கள்**

கடமை நிறைவேற்று அதிபரைக் கொண்ட பாடசாலைகளுக்கு அதிபர் தரமுள்ள ஒருவரை நியமிக்கும் போது அக் கடமை நிறைவேற்று அதிபரின் தொடர் சேவை பாதிக்காதவகையில் இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

**07. வேறு விடயங்கள்**

7.1 இடமாற்ற சபையில் குறித்த வலய அதிபர் சங்கப் பிரதிநிதி ஒருவர் இருத்தல் வேண்டும்.

7.2 அதிபர்கள் ஓய்வுபெறும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் புதிய அதிபர் தெரிவிற்கான நேர்முகத்தேர்வு நடாத்தி தகுதியானவரை தெரிவு செய்தல் வேண்டும்.

7.3 அதிபர் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அது அனைவருக்கும் தெரியப்படுத்தும் விதமாக பத்திரிகைகளில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

7.4 1AB, 1C பாடசாலைகளுக்கு அதிபர் தரம் 2-II, 3 அதிபர்களைக் கோரும்போது பட்டதாரிகளாக இருப்பதைக் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

அதிபர் இடமாற்றத்திற்கான இடமாற்ற சபை வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் ஏப்ரல் முதல் வாரத்தில் நியமிக்கப்படும்.

இவ் இடமாற்ற சபை 01 மாத காலத்தினுள் இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய அதிபர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும்.

இடமாற்றம் பெறும் அதிபர்களின் பெயர் விபரங்கள் குறித்த கோட்ட, வலய அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்.

**இடமாற்றம் தொடர்பான மேன் முறையீடு**

இடமாற்றம் தொடர்பான மேன் முறையீடுகள் இரு வார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட அதிபர்களினால் இடமாற்ற சபைக்கு விண்ணப்பிக்க முடியும். இம் மேன்முறையீடுகள் உரிய சபையினால் பரிசீலனை செய்யப்பட்டு இறுதி இடமாற்றப்பட்டியல் தயாரிக்கப்படும்.

இந் நடைமுறைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட பின் அதிபர் இடமாற்றப் பட்டியல் இணையத் தளம் மூலம் வெளியிடப்படும்.

**சி.சத்தியசீலன்**

செயலாளர்

| | Particulars of Principal transfer criteria committee | | | | |
|---|---|---|---|---|---|
| இல | வலயம் | பெயர் | அதிபர் வகுப்பு/தரம் | பாடசாலை | தொ.பே. இல |
| 1 | யாழ்ப்பாணம் | திரு.மு.மகேந்திரன் | இ.அ.சே. 2 - I | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி | 021 222 3322 |
| 2 | வலிகாமம் | திரு.வ.ஸ்ரீகாந்தன் | இ.அ.சே. 1 | யா/விக்ரோறியாக் கல்லூரி | 773609017 |
| 3 | வடமராட்சி | திரு.எஸ்.சிறிராமச்சந்திரன் | இ.அ.சே. 1 | யா/ஞானாச்சாரியார் கல்லூரி | 750421170 |
| 4 | தென்மராட்சி | திரு.வே.விநாயகமூர்த்தி | இ.அ.சே. 2-I | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. | 778659245 |
| 5 | தீவகம் | திரு.வே.முருகமூர்த்தி | இ.அ.சே. 1 | யா/யாழ்ற்றன் கல்லூரி | 714483844 |
| 6 | கிளிநொச்சி | திரு.தி.வரதன் | இ.அ.சே. 2 - II | கிளி/முருகானந்தாக் கல்லூரி | 776171397 |
| 7 | முல்லைத்தீவு | திரு.செ.அல்பிறட் | இ.அ.சே. 2 - I | மு/முல்லைத்தீவு மகா வித்தி. | 770424792 |
| 8 | துணுக்காய் | திரு.ப.இரவீந்திரநாதன் | இ.அ.சே. 2 - II | மு/மாங்குளம் ம.வி | 770755246 |
| 9 | மன்னார் | திரு.ப.சந்தியோகு | இ.அ.சே. 2 - I | மன்/பரிகாரக்கண்டல் அ.த.க.பா. | 750385045 |
| 10 | மடு | திரு.செ.மி.சேவியர் | இ.அ.சே. 2 - I | மன்/கருங்கண்டல் றோ.க.த.க.பா. | 023 323 8199 |
| 11 | வவு.தெற்கு | திரு.சு.அமிர்தலிங்கம் | இ.அ.சே. 2 - I | வ/நெளுங்குளம் கலைமகள் ம.வி. | 771983556 |
| 12 | வவு.வடக்கு | திரு.ச.பரமேஸ்வரநாதன் | இ.அ.சே. 2 - II | வ/பம்பைமடு அ.த.க.பா | 776404386 |
| 13 | வ.மா.அ.சங் | திரு.ச.சிவநேஸ்வரன் | இ.அ.சே. 1 | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 712670295 |
| 14 | இ.ஆ.சங் | வி.இ.ஹஸ்ரன் றோய் | இ.அ.சே. 2 - II | யா/தம்பட்டி அ.த.மு.பா (தீவகம்) | 778031083 |
| 15 | இஸ்.அ.சங். | திரு.முஹம்மது சறிப் றம்ஸீன் | இ.அ.சே. 2 - II | வ/வவுனியா முஸ்லீம் ம.வி. | 774464979 |
| 16 | இ.த.ஆ.சங். | திரு.S.சுதர்சன் | - | - | - |
| 17 | - | செல்வி.உமா இராசையா | இ.அ.சே. I | வ/சைவப்பிரகாச ம.கல்லூரி | 024 222 2281 |
| 18 | - | குயவாநச.து.யு.ஜேசுதாஸ் | இ.அ.சே. 2 - ஐ | யா.ஃ.சென்.ஹென்றிஸ் கல்லூரி | 777299901 |